[18th July 1962

Special coaching in English for S.S.L.C. students

* 392 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have any proposal to impart special coaching in English during summer holidays to students who have appeared for S.S.L.C. examination?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

திரு. வை. சங்கரன் : கீழே தமிழை போதனை மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு பி.யு.ஸி. வகுப்புக்கு வரும்பொழுது அங்கே ஆங்கிலம் போதனைமொழியாக இருப்பதினால் ஒரு 'ஹாண்டிகேப்' ஏற்படுகிறது. பி.யு.ஸி. வகுப்புக்குத் தகுந்த போதுமான எழுதும் திறனும், புரிந்துகொள்ளும் திறனும் பெறக் கூடிய அளவுக்கு ஆங்கிலத்தில் பொது அறிவு வளரக்கூடிய வகையில் கீழே தமிழை போதனைமொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு, ஆங்கிலத்தில் நல்ல தரம் உயருவதற்கு, ஆங்கிலத்தில் பொது அறிவு பெறுவதற்கு ஏதாவது வழி செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆங்கிலத்தைச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு பிரிட்டிஷ் கவுன்ஸில் ஒத்துழைப்பைக் கொண்டு விசேஷ பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆகவே, இதற்காகப் பிள்ளைகளுக்கு 'ஸ்பெஷல் கோச்சிங்' கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் முன்பே குறிப்பிட்டேன்.

Scholarships for study of Tamil

* 393 Q.—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Government propose to award scholarships for the non-Tamil speaking students for the study of Tamil, and

(b) whether the Government propose to start a Tamil Prachar Sabha to be located at Delhi just as Hindi Prachar Sabha in the South?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) No, Sir.

திரு. எம். எஸ். செல்வராஜன் : லாடின், பாலி, லத்தீன் போன்று, மொழியில் நல்ல பழமையும் இலக்கியச் சுவையுமுள்ள தமிழ்மொழி தேசம் முழுவதும் பரவுவதற்கு இந்தத் தமிழ் நாடு அரசாங்கம் என்ன விசேஷ முயற்சிகள் இதுவரையில் எடுத்துக் கொண்டிருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டெல்லி யுனிவர்ஸிடியில் 1959-60 முதல் ஐந்து ஆண்டுகளுக்குத் தமிழைச் சொல்லிக்கொடுப்பதற்கு ஒரு ரீடர் வைப்பதற்கு ரூபாய் 10,000 உதவி அளிக்கிறோம். ஹைதராபாத் உஸ்மேனியா யுனிவர்ஸிடியில் ஒரு தமிழ் 'ப்ரொபஸர்' வைப்பதற்கு ஆண்டுதோறும் நாம் ரூபாய் 10,000 உதவி அளிக்கிறோம். அதே போன்று அலகாபாத் யுனிவர்ஸிடியில் தமிழிலே ஒரு லெக்சரர் வைப்பதற்கு ரூபாய் 4,800-க்கு மேற்படாமல் எவ்வளவு செலவாகுமோ அந்தத் தொகையைக்